ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

## ஜீயர் நாயனார் (மணவாளமாமுனிகளின் பூர்வாஸ்ரம பௌத்ரரர்) - வருஷ திருநட்சத்திரம் - சித்திரை – கார்த்திகை

### தனியன்

அஸ்மாஸு வத்ஸலதயா க்ருபயா ச பூய:

ஸ்வேச்சாவதீர்ணமிவ ஸௌம்யவரம் முநீந்த்ரம்

ஆசார்ய பௌத்ர மபிராம வராபிதாநம்

அஸ்மத்குரும் பரமகாருணிகம் பஜாமி.

### வாழித்திருநாமம்

சீராரும் வரமுனிவன் செழுங்குலத்தோன் வாழியே
சித்திரையில் கார்த்திகை நாள் சிறக்க வந்தோன் வாழியே
பாராரும் எதிராசன் பதம் பணிவோன் வாழியே
பாடியத்தின் உட்பொருளை பகருமவன் வாழியே
ஆரம் சூழ் குருகைதனில் அவதரித்தோன் வாழியே
ஆழ்வார்கள் கலைப்பொருளை ஆய்ந்துரைப்போன் வாழியே
வரதகுரு கருனையினால் வாழ்வுடையோன் வாழியே
வான்சீர் நயினார் மலர்ப்பதங்கள் வாழியே.

பாகவதர் வாழ பராங்குசன் தன் சீர்வாழ
தாமுடன் வந்தணைந்தோன் தாம் வாழ
போதமிகு தென்னரங்கம் வாழ சீயர்நயினார்
இன்னமொரு நூற்றாண்டிரும்.

அவதாரஸ்தலம் - ஆழ்வார் திருநகரி
திருநாமங்கள் - அழகியமணவாளப் பெருமாள் நாயனார், ஜீயர் நாயனார், அபிராமவரர் (வடமொழியில்)
திருத்தகப்பனார் - இராமாநுஜாசார்யர் (பெரிய ஜீயர் பூர்வாஸ்ரமத்தில் குமாரர்)
திருவாராதனமும் ஆசார்யரும் - பெரிய ஜீயர்
இவருக்குத் திருவாய்மொழி ஈட்டை ப்ராசாதித்து அருளியவர் - கோயில் கந்தாடை அண்ணன்
ஸ்ரீபாஷ்யம் ப்ராசாதித்து அருளியவர் - ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா
இவர் அருளிய க்ரந்தங்கள் - உபதேசரத்தனமாலையை வடமொழியில் ஸ்லோகம் எழுதினார், நசஷத்ரமாலை
இவர் பெரிய ஜீயரிடம் திருக்குரகைப்பிரான் பிள்ளானைப்போலே அத்யாதரணீயராய் இருப்பர்.

## ஜீயர் நாயனார் திரு அவதாரம்

பெரிய ஜீயரின் பூர்வாஸ்ரமத்து திருக்குமாரரான இராமாநுஜசார்யர் ஆழ்வார் திருநகரியில் வாழ்ந்து வந்தார். அங்கேயே திருக்கல்யாணம் செய்து கொண்டார்.

சில காலங்கள் கழித்து இவருக்கு ஒரு திருக்குமாரர் பிறந்தார். அவருக்கு அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்று பெரிய ஜீயாரின் திருநாமத்தை சாற்றி அழைத்தார். சிலகாலம் கழித்து அவர் ஸ்ரீவில்லிபூத்தூருக்குச் சென்று குடியேறினார். அங்கே பின்னும் ஒரு திருக்குமாரர் பிறந்தார். அவருக்கு என்ன திருநாமம் இடுவது என்று பெரிய ஜீயர் சந்நதியிலே கேட்டு வர ஒரு ஸ்ரீவைஷ்ணவரை அனுப்பினார். பெரிய ஜீயரும் ஸ்ரீவில்லிபுத்தூரிலே பிறந்த குழந்தைக்கு என்ன பெயர் இடுவது என்று கேட்டு விடுவது ஏன்? என்று சொல்லி பெரியாழ்வார் திருநாமத்தைச் சாற்றுங்கள் என்று அந்த ஸ்ரீவைஷ்ணவரிடம் சொல்லி அனுப்பினார்.

அப்படியே இரண்டாவது பிள்ளைக்கு பெரியாழ்வார் ஐயன் என்று திருநாமம் சாற்றினார்.

சிலகாலம் கழித்து அவர்களுக்கு உபநயனம் நடைபெற்றது. பிறகு அவர்கள் இருவரும் பெரிய ஜீயர் திருவடிகளை வந்து ஆச்ரயித்தனர்.

## ஜீயர் நாயனார் என்ற திருநாமம் ஏற்படக் காரணம் என்ன?

பெரியஜீயர் ஸ்ரீபாதத்து சிஷ்யர்கள் எல்லாரும் தங்கள் புத்திரர்களுக்கு நாயனார் என்று திருநாமம் சாற்றியிருந்தபடியால் மூத்த திருக்குமாரர் அழகிய மணவாளப் பெருமாள் நானயரை ஜீயர் நாயனார் என்று குறிப்பிட்டு அழைத்தனர்.

ஜீயர் நாயனார் பெரிய ஜீயர் திருவடிகளைப் பிரியாது சேவை செய்து வந்தார்.

ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு ஆளவந்தாராப்போலத் தமக்கு பௌத்ரரான (பேரன்) ஜீயர் நாயனாரை தரிசனப்பிரவர்த்தகர் ஆகும்படி பெரிய ஜீயர் விசேஷகடாக்ஷம் செய்தருளினார்.

## ஜீயர் நாயனார் ஸ்ரீபாஷ்யம் மற்றும் திருவாய்மொழி ஈடு பெற்றது

கந்தாடை அண்ணனும் பெரிய ஜீயர் நியமனத்தின்படியே ஆசார்யரின் பௌத்ரரான ஜீயர் நாயனாருக்குத் திருவாய்மொழியின் ஈட்டை உபதேசித்தார். ப்ரதிவாதி பயங்கரம் அண்ணாவும் ஜீயர் நாயனாருக்கும் கந்தாடை நாயனுக்கும் ஸ்ரீபாஷ்ய காலசேஷபம் சாதித்தார்.

அதையடுத்து திருவரங்கம் திருப்பதியே இடுப்பிடமாக எழுந்தருளியிருந்த போலிப்பாக்கம் போரேற்று நாயானார் முதலானவர்களுக்கும் ஸ்ரீபாஷ்யத்தை உபதேசித்தார்.

பிறகு பட்டர் பிரான் ஜீயரின் வம்சத்தில் வந்த பரவஸ்து ஸ்ரீநிவாசாசாரியருக்கும் மற்றும் பரவஸ்து அழகிய மணவாள ஜீயருக்கும் திருவாய்மொழியின் ஈட்டை உபதேசித்து ப்ரதிவாதி பயங்கரர் என்னும் ப்ரதிபத்தி தோன்ற ஸ்ரீராமாநுஜ சித்தாந்தத்தை வளர்த்து வந்தார்.

## வானமாமலை ஜீயரும் ஜீயர் நாயனாரும்

பொன்னடிக்கால் ஜீயர் என்று அழைக்க படுகிற வானமாமலை ராமாநுஜ ஜீயர் வடதேச யாத்திரையை முடித்துக் கொண்டு திருவரங்கம் நோக்கி வரும் வழியில் திருமலை அருகே வரும் போது பெரிய ஜீயர் பரமதித்ததை கேள்விபட்டு மிக வருத்தத்துடன் நேரே பெரிய ஜீயர் மடத்திற்கு எழுந்தருளினார்.

அங்கே ஜீயர் நாயனார் மாமுனிகள் தம்மிடம் அந்திம தசையில் நியமித்த விஷயங்களை அவரிடம் விண்ணப்பித்தார். மாமுனிகள் தம் திருக்கையில் தரித்து இருந்த திரிதண்டத்தில் உள்ள உபதண்டத்தையும், திருக்கையில் அணிந்திருந்த திருவாழி மோதிரத்தையும், திருவாய்மொழிப்பிள்ளையின் திருவடி நிலைகளையும் தேவரீரிடத்தில் நித்யமாய் இருக்கும்படி கொடுக்கவும் என நியமித்து அருளினார் என்று விண்ணப்பம் செய்தார். அவைகளைப் பெற்றுக் கொண்டு பொன்னடிக்கால் ஜீயர் வானமாமலைக்கு எழுந்தருளினார். இன்றும் நாங்குநேரியில் உள்ள வானமாமலை ஜீயர் மடத்தில் மாமுனிகளின் திருவாழி மோதிரமும் உபதண்டமும் திருவாய்மொழிப்பிள்ளையின் திருவடி நிலைகளும் சேவிக்கும்படி உள்ளன.

திருவரங்கத்தில் பெரிய ஜீயர் மடத்தில் மாமுனிகள் திரு உருவச்சித்திரங்களை வானமாமலை ஜீயரே ஏறியருளப்பண்ணி வைத்தார். இந்த திருவுரவச்சித்திரங்களுக்கு நித்தியம் திருவாராதனம் நடைபெற்று வருகிறது.

ஜீயர் நாயனார் உபதேசரத்தினமாலையை வடமொழியில் ஸ்லோகமாக அருளினார். மற்றும் நசஷத்ரமாலை என்னும் ஸ்லோக நூலும் அருளிச் செய்தார்.

மேலே குறிப்பிட்டுள்ள விஷயங்கள் மதுரை டாக்டர் இரா.அரங்கராஜன் ஸ்வாமி தொகுத்து வெளியிட்டுள்ள மன்னுபுகழ் மணவாளமாமுனிகள் என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.

**ஜீயர் நாயானார் திருவடிகளே சரணம்**

வாசிக தோஷ: சஷந்தவ்ய: